**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO I, SATTUR**

| | | |
|---|---|---|
| Calendar | ) | |
| | ) | |
| Miscellaneous | ) | |
| | ) | Case No. CC. **53/2022** |
| Preliminary Register | ) | |
| | ) | |
| Sessions | ) | |

| | |
|---|---|
| | Prosecution pw-2 |
| Deposition of witness for | Defence |
| | Court |

Name : திரு.செல்வகணேசன் (TMB Manager, Elayirampannai)

Father's Name :

Village :

Taluk :

Age :

எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 மனுவானது இணையவழியாக பதிவேற்றம் செய்யப்பட்டது.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

15.09.2026

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்பொழுது TMB வங்கி, ஏழாயிரம்பண்ணை கிளையில் மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். புகார்தாரர் ரவிக்குமார் அவரது பெயரில் சேமிப்பு கணக்கு நான் பணிபுரியும் வங்கியில் வைத்துள்ளார் என்றால் சரிதான். சேமிப்பு கணக்கு சம்மந்தமாக ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றதென்றால் சரிதான். புகார்தாரர் வங்கி கணக்கில் இருந்து B.சொர்ணவேல் என்பவரின் வங்கி கணக்கிற்கு 24.09.2019ம் தேதியன்று ரூ.10 லட்சம் பண பரிவர்த்தனை நடைபெற்றுள்ளதென்றால் சரிதான். பணம் பெறுபவரின் வங்கி கணக்கு எண் மற்றும் வங்கியின் பெயர் குறித்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வங்கிக்கணக்கிற்கு பணம் ரூ.10 லட்சம் அனுப்பப்பட்டிருந்தால் எங்களது finacle software ல் எந்த வங்கிக்கணக்கு மற்றும் வங்கி

எண் குறித்த விவரம் பதிவு செய்யப்பட்டிருக்கும் என்றால் சரிதான். முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.